செய்தி வெளியீடு எண் : 401 நாள் : 28.02.2023

**மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் புதுதில்லி, தமிழ்நாடு இல்லத்தில் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியின் விவரம்.**

நேற்று மாண்புமிகு பஞ்சாப் ஆளுநர் திரு. பன்வாரிலால் புரோகித் அவர்களின் இல்ல திருமண விழாவில் கலந்து கொள்ள வந்திருந்தேன்.

இன்று (28.2.2023) காலை மாண்புமிகு ஒன்றிய ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் திரு.கிரிராஜ் சிங் அவர்களை சந்தித்து தமிழ்நாட்டில் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு தேவையான கோரிக்கைகளை அதிகாரிகளுடன் முன் வைத்துள்ளோம். கோரிக்கைகளை செய்து தருவார் என நம்புகிறேன்.

மாண்புமிகு பிரதமர் அவர்களை சந்திக்க நேரம் கேட்டிருந்தேன். கடந்த முறை மாண்புமிகு பிரதமர் அவர்கள் சென்னை வந்த போது, புது தில்லி வரும் போது என்னை வந்து சந்திக்க வேண்டும் என தெரிவித்திருந்தார். அதன் தொடர்ச்சியாக இன்று மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களை சந்தித்து அவரது தாயார் மறைவிற்கு இரங்கல் தெரிவித்தேன். எந்த விதமான அரசியலும் பேசவில்லை.

மாண்புமிகு பிரதமர் அவர்கள், தமிழ்நாட்டில் விளையாட்டு மேம்பாட்டுத்துறை தொடர்பான விவரங்களை கேட்டார். ரூபாய் 25 கோடியில் தமிழ்நாடு முதலமைச்சர் கோப்பை போட்டிகள் நடைபெற்று வருவதை

தெரிவித்தேன். அடுத்த முறை கேலோ இந்தியா போட்டிகளை தமிழ்நாட்டில் நடத்த வாய்ப்பளிக்க வேண்டும் என கேட்டுக் கொண்டேன்.

நீட் விவகாரம் தொடர்பாக சொன்னேன். மாண்புமிகு பிரதமர் அவர்களும் அதற்கு சில விளக்கங்கள் தெரிவித்தார். தமிழ்நாடு மக்களின் மனநிலையை மாண்புமிகு பிரதமர் அவர்களிடம் தெரிவித்துள்ளேன். இது எனது கடமை, நீட் தொடர்பான தமிழ் மொழி, தமிழ்நாட்டின் சட்டப் போராட்டம் தொடரும், எனக் கூறினேன்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in